
# சுவை சொட்டும் சொற்பொழிவு



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# சுவை சொட்டும் சொற்பொழிவு

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

# நூல் விளக்கம்


| | |
|---|---|
| நூற்பெயர் | சுவை சொட்டும் சொற்பொழிவு |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார். |
| முதற்பதிப்பு | தி. பி. 2048 கி. பி. 2017 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| தாள் | 13. 7 வெள்ளைத் தாள். |
| அளவு | 1/8 |
| பக்கம் | iv + 28 = 32 |
| படிகள் | : 800 |
| விலை | உருவா 25/- |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23<br>0431 - 202421 |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006. |

# சொற்பொழிவு - முன்னுரை

'பிரசங்கம்' என வழங்கியது, 'பெருஞ்சொல் விளக்கம்' எனத் தமிழ்வடிவுற்றது.

நெல்லைவாணர் ஒருவர், 'சொற்பொழிவு ஆற்றுப்படை' படைத்தார். பின்னர்ச், சொற்பொழிவு, பொழிவு என்பவை காலூன்றி மழைப் பெருக்காக விரிந்தன. சொற்பொழிவு, மேடைத் தமிழ் எனப்பல நூல்கள் பலரால் வரையப்பட்டுள. எந்நூலைக் கொண்டும் எவருரையைக் கொண்டும் இந்நூல் தழுவலாய் அமைந்தது இல்லை! என் பட்டறிவு கொண்டு வரைந்ததே இது.

ஐந்தாம் வகுப்புப் பயிலும்போதே மேடையேறினேன். ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டு பல்லாயிர மேடைகளில் பொழிந்துள்ளேன். திருமணம், திருமண உறுதி, புதுமனைவிழா, மணிவிழா, ஆய்வரங்கு, கருத்தரங்கு, பாட்டரங்கு எனப் பலவகைய! வகுப்புகள், கலந்துரையாடல், தொடர்பொழிவுகள் என்பனவும் உண்டு. ஆதலால் மேற்கோள்கள் பொழிவாளர்கள் வரிசை என்பவை எல்லாம் இடம்பெறல் அரிது.

நூற்பெருக்கம், படிப்பாளர் சுருக்கம், காலப்பரபரப்பு என்பவை குறுநூலாக்கத் தூண்டல்கள் ஆகின்றன. இவ்வுத்தி மறைமலையடிகள், திரு.வி.க., பெரியார், அண்ணா முதலியோர் கொண்ட வழிகள்! எளியனும் பட்டறிவால் கண்டவழி! அவ்வழியே செவ்வழியாய்ச் சிறுசுவடியாய் வருகிறது.

நூல் இயற்றியவன் யான் எனினும் அச்சிடல் மெய்ப்புப் பார்த்தல் அட்டையமைத்தல் பொறுப்பு அனைத்தும் நயத்தகு தோன்றல் முனைவர் பி. தமிழகனாரைச் சார்ந்தனவேயாம். அவர்க்கும் அச்சகப் பேரன்பர்களுக்கும் நன்றியுடையேன்.

**வாழிய நலனே! வாழிய நிலனே!**

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# உள்ளுறை

பக்கம்

முன்னுரை iii

1. காலம் தவறாக் கடைப்பிடி 1
2. சால்பு 5
3. நடுமை 8
4. பொழிவின் நடை 10
5. சூழல் 14
6. பொருள் 19
7. மெய்ப்பாடு 22
8. மின்னல் கீற்று 24
9. நிறைவுரை 28

## காணிக்கை

இச்சுவடி, தவச்சாலையும், பாவாணர் தமிழியக்கமும் இதுகாறும் தொடர்ந்து ஏறத்தாழ 200 பொழிவுகள், மூன்றாம் ஞாயிறு மாலை 3.30 முதல் 6.00 மணி வரை செயற்கு இசைவுதந்து, அவ்விசைவை உரோமைப்போப்பாண்டகை வழியாக உறுதிப்படுத்தி, கூட்டந்தோறும், இடம் - இருக்கை - ஒலி பெருக்கி, அவையோருக்குத் தேநீர், மாச்சில் - எனத் தூய சின்னப்பர் வளாகக் குருத்துவக்கல்லூரியில் உதவிவர ஏற்பாடு செய்த ஆயர் ஆண்டகை தவத்திரு செ. சூசைமாணிக்க அடிகளார் பேரருள் கொடை போற்றும் வகையால் **சுவை சொட்டும் சொற்பொழிவு** என்னும் இந்நூலைக் காணிக்கையாக்கி மகிழ்கிறோம்.

காணிக்கையாவது, கண்காண வழங்கும் கடப்பாட்டுக் கொடையாம்.

கு.திருமாறன் பி.தமிழகன் இரா.இளங்குமரன்

# 1. காலம் தவறாக் கடைப்பிடி

ஏற்றுக் கொண்ட பொழிவுக்கு உரிய பொழுதிற்கு முன்னமே அவைக்குப் பொழிவாளர் சென்று விடுதல் தலையாய கடமை. பொழிவாளர் உரிய பொழுதில் வரமாட்டார் என்ற எண்ணம் அவையைக் கூட்டியவர்க்கோ, அவையினர்க்கோ ஏற்பட்டுவிட்டால் அவர்களும் காலம் கருதாமலே அவை ஏற்பாடும், அவைக்கு வருதலும் செய்வர்.

'பொழிவர், உரிய பொழுது தவறார்' என்னும் எண்ணம் அவர்களுக்கு அழுத்தமானால், அவர்களும் உரிய பொழுதில் ஏற்பாடுகள் செய்வர்; அவையினரும் உரிய பொழுதில் வந்து விடுவர்; "பொழிவாளர் தவறாமல் வந்துவிடுவர், எதைப்பற்றியும் எவரைப் பற்றியும் காத்திராமல் பொழிவைத் தொடங்கிவிடுவார்" என்ற எண்ணப் பதிவு திண்ணமாய் ஏற்பட்டிருக்குமாயின் முந்து, முந்து, தம்நிலையில் ஏற்பாட்டாளரும் அவையினரும் தம்கடமைகளைத் தவறாது செய்துவிட்டு எதிர்நோக்கியிருப்பர்.

உரிய பொழுதில் ஏற்பாட்டாளர் செய்வன செய்யாவிடினும் நாணம் உண்டாம்! அவையோரும் பிந்துதல் உணர வாய்க்கும். அடுத்த கூட்டத்தில் அந்நிலை ஏற்படாமல் உரிய பொழுதில் எல்லாரும் இருந்து தொடங்க வாய்க்கும். ஒன்றிரண்டு கூட்டங்களுக்குப் பிந்தி வந்தாலும் தம்நிலையையும் கூட்ட ஒழுங்கையும் உணர்ந்து போற்றிக் கொள்ள வாய்க்கும். ஆதலால், காலம் தவறாக் கடைப்பிடி **அவையொழுக்கத்தில் தலைப்பட்டதாம்.**

சிலபேர், 'காலம் இது முதல் இது வரை' எனக் குறிப்பிடுவர் அழைப்பிதழில்! 'சரியாக இத்தனை மணி இத்தனை நிமையம்' என்றும் அழைப்பில் குறிப்பிடுவர். தலைவர் வரவில்லை, முன்னிலையர் வரவில்லை, வந்துவிடுவார், வந்து கொண்டிருக்கிறார், கூட்டம் சேரவில்லை, முதன்மையானவர், புரவலர் வந்ததும் தொடங்கலாம் என்று சொல்லிச் செவ்விதின் பொழிவரையும், அவையரையும் தண்டிப்பர்! தண்டிப்பர்! தண்டு கொண்டு அடியாமலே, காலத்தாழ்வு என்னும் தண்டால் அடித்துக் கொண்டே இருப்பர்! கூட்டம் தொடங்கப் போகிறது: அரங்குக்குள் வந்து அமருங்கள் என்று ஒருமுறை இல்லை

பலமுறை கூறுவர். ஆனால் அப்படி வெளியே நிற்பாரும் இரார்! அழைக்கும் வகையுள் அஃது ஒன்று என்று நாம் கொள்ளவேண்டும்.

தனியார் பேருந்து நடத்துநர், கூட்டம் சேர்ப்பதற்குப் புறப்படப் போவது போல் சீட்டி ஊதுவார்; உடனே புறப்படாமல் இருக்க ஊதுவார்; ஒருவர் தலைகண்டதும் விரைந்து வண்டி புறப்பட ஊதுவது போல ஊதுவார்; அவர் ஏறிய உடன் நிறுத்துமாறு ஊதுவார்; மாறிமாறி ஊதிக் கொண்டே இருப்பார்; அதற்குள் அரசு வண்டி மூன்று நான்கு கடந்து போய்க் கொண்டே இருக்கும். ஊதுவார்! ஓட்டுநர் உருட்டப் போவது போல் உருட்டுவார். உருட்டுவார், உடன் நிறுத்துவார், கூட்டம் நிரம்பி வழிந்தால் தான் ஓட்டுவார். நடத்துநரும் வேண்டா விருப்பில் தான் புறப்பட ஊதுவார். இந்தக் காட்சி தான் சில கூட்டங்களின் காட்சியாம்.

கூட்டங்களிலோ - ஆய்வுக் கூட்டம் - கருத்தரங்கக் கூட்டம் ஆயவற்றிலோ - சீட்டி இல்லாமலே அறிவிப்பாளர் அதே உத்தியைக் கடைப் பிடிப்பார்! கடைசியில் வரவேற்பு, அறிமுகம், தலைமை உரை என்பவை எல்லாம் முடிந்திருக்க வேண்டிய பொழுதில் கூட்டம் தொடங்கப் போவதை அறிவிப்பார். ஒருங்கிணைப்பாளர், ஒலி வாங்கியைப் பிடிப்பார். காலத்தாழ்வு ஏற்பட்டமை பற்றி எடுத்தும் விரித்தும் உரைத்து மேலும் காலத்தாழ்வு ஆக்குவார். நேரே தொடங்குவதற்கு அவர்தம் அறிவிப்பு எளிதில் இடம் தந்து விடாது! ஒலிபெருக்கிக் காதல் அத்தகு பெருமையுடையது!

வரவேற்பு என்பார்! வரவேற்பாளரை அறிமுகப் படுத்துவார். அவர் எளிதில் வரவேற்பாரா? நேரம் ஆகிவிட்டது என்று சொல்லிக் கொண்டே 'அவர்களே', 'அவர்களே' என இருபது பேர் அழைப்பிதழில் இருந்தாலும், படியாமல் மொத்தமாக குறிப்பாக வரவேற்புச் செய்யமாட்டார். அழைப்பிதழில் உள்ளார் பெயர் சொன்னதுடன் நில்லாமல் அவையில் உள்ளாரையும் பெயரும் பெருமையும் சொல்லிச் சொல்லி வரவேற்பார்! அடுத்து அறிமுகப்படுத்துபவர் ஒலி வாங்கியைப் பிடிப்பார், பிடிப்பார்! 'அடி முடி தேடு' படலமாய் ஒவ்வொருவர்க்கும் மேலும் விரியச் சொல்லிக் கூட்டத்தின் முக்கால் பங்கு நேரம் முடிய அறிமுகம் செய்வார்!

தலைவர் அவையுணர்வும் கால உணர்வும் உடையவரானால் ஓரளவு சுருங்க உரைப்பர்! நன்மையாகச் சிலர் எழுதிவந்து படிப்பர்.

எனில், சுருக்கமாக இருக்கும். அத்தகைய அத்தலைமை உரையும் பக்கம் பக்கமாகப் படிப்பர் என்றால் பொழிவர்க்கும் அனைவர்க்கும் பாடுதான்!

இனி, முன்னிலையர் இருப்பர்; தொடக்க உரையர் இருப்பர்! அனைவரும் அழைப்பிதழில் உள்ளவர்கள் பெயர்களைச் சொல்லி ‘அவர்களே', ‘அவர்களே' என்னும் திருக்கூத்தை விடாமல் தொடர்வர். தொடர்வதற்குப் பக்கத்தே ஒருவர் நின்று எழுதிச் சீட்டுத் தருவர்; அதற்குமேல் காதோடு காதாகச் சொல்வார்! முன்னிலையர் பின்னே தொடர்வர்!

அப்பாடா! சிறப்புரையாளர் பெயர் சொல்லும்போது கூட்டத்திற்குரிய இறுதிப்பொழுது அல்லது கூட்டம் முடித்துப் புறப்பட்டுப் போயிருக்க வேண்டிய பொழுதாக இருக்கும். இந்த அழகில் அவராவது ‘அவர்களே' விடுவாரா? அவரும் விடார்! அவரிடம் மெல்ல வந்து நேரமாகி விட்டது 5 மணித்துளி அளவில் முடித்து விடுங்கள் என்பார்! அவர் கூட்டத்திற்கு வர 4, 5 மணி செலவிட்டிருப்பார்! காத்திருப்பில் 1, 1½, 2 மணி செலவிட்டிருப்பார்! ஐந்து மணித்துளியில் பேசி முடிக்க வேண்டுமாம்! அப்பொழுது கூட்டத்தில் முக்கால் பங்கினர் போயிருப்பர்! அவர் சுவையும் பொருளும் அமையப் பொழிவர் என்றால் சிலரேனும் கேட்க அவையில் இருப்பர்! இத்தனைக்கும் அழைப்பிதழில் தொடக்கம் - வரவேற்பு - அறிமுகம் என நேரம் சரியாக வரம்பு செய்து அச்சிடப்பட்டிருக்கும். அதுவும் ஒவ்வொருவர் கையிலும் தரவும் பட்டிருக்கும்!

இந்நிலையிலே குறித்த பொழுதில் எவர் வந்தாலும் வரவில்லையானாலும், எத்தனை பேர் இருந்தாலும், பொழிவாளர் தலைவர் வரவில்லை ஆனாலும், ஒருமணித்துளி முந்தாமலும் பிந்தாமலும் தொடங்கி முடியும் என வரம்பிட்ட பொழுதில் நடத்தப்படும் கூட்டங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறாமல் இல்லை. அவ்வாறு திட்டப்படுத்தி நடத்துபவர் காலக்கடப்பாடு அறிந்தவர்; கட்டமை நெறியுடையவர்; நூற்றுக்கணக்கான கூட்டங்களை அப்படியே நடத்தித் தழும்பேறியவர்! அவர்கள் வணக்கத்துக்கும் வாழ்த்துக்கும் உரியர்.

அவ்வாறு செய்தார், செய்து வருவார் யார் யார் எனச் சுட்டிக்காட்ட இயலும்!

தலைவரோ, சிறப்புரையரோ இல்லை எனினும் அவர் வரும்போது பொழியட்டும், நாம் தொடங்கி விடுவோம் என்னும் உறுதிப்பாட்டுடன் செயல்படுவாரும் உளர்! என்னளவில் அறியப்பட்டாரைச் சுட்டின், பலரும் அறிந்த பிறபிற கட்டொழுங்கு நிகழ்ச்சியரை விட்டுவிட்ட குறைபாடு தோன்றும்! ஆதலால், 'பெயர் சுட்டாப் பெற்றிமை சாலும்' என அமைகின்றேன்.

சுருங்கச் சொன்னால் சிறப்புப் பொழிவர் காலம் தவறாக் கடைப்பிடியர் என்றால், பிறரும் அக்கடைப்பிடியை ஓரிரு கூட்டங்களில் கொண்டு விடுவர்! பின்னர் உரியபொழுதில் தொடங்கி உரிய பொழுதில் கூட்டம் முடியும் என்னும் நம்பிக்கை அவையர்க்குத் தெளிவாகி விடும். எடுத்துக்காட்டாளராகப் பொழிவர் இருத்தல் மட்டுமே அவை அமைப்போரையும் அவையோரையும் நெறிப்படுத்தல் உறுதியாம்!

அவைக்கென உள்ள பொழுது தாழ்த்தி முடியும் பொழுதளவும் தொடங்கா நிலையும் உண்டு. அந்நிலையில், பொழிவாளர் இனி நான் உரையாற்றேன் என் பொழுது முடிந்தது என்பதைக் கூறிப்புறப்பட்டுவிட்டால் அந்நிலை பின்னர் ஏற்படாது. ஆனால், வழிச்செலவு உறை, கையுறை ஆகவில்லை எனக் கவலைப்படுவார். கருதியிருப்பார்க்கு இத்துணிவு வாராது! நெளிந்து கொண்டிருப்பார்! கூட்ட ஏற்பாட்டாளர் தலையும் தெரியாது! தம் பையில் தொகையும் இல்லை என்றால் என் செய்வார்? பாவம்!

காலம் தவறாக் கடைப்பிடி, கூட்டம் கூட்டுவார்க்கு வேண்டும் என்பது மட்டுமன்று. பொழிவாளர்க்கு அதற்குமேல் வேண்டும். அவரைக் கொண்டே அவை கூட்டுவாரும் அவைக்கு வருவாரும் காலக் கருத்தராவர் என்பது மேலே சொல்லப்படும்.

❖❖❖❖

# 2. சால்பு

சொற்பொழிவுச் சிறப்புக்குச் சால்பு கட்டாயம் வேண்டும். சால்பாவது நிறைபண்பு. கூட்டத்திற்கு வருபவர் ஒரு சமயத்தார் அல்லர்; ஒரு சாதியார் அல்லர்; ஒரு கட்சியார் அல்லர்; ஒரே பாலினரோ அல்லர்; பலரும் இருப்பர்! ஆதலால் அவைக்கு ஒரு பெயர் 'பொது' என்பர். இறை முன்னிலையைப் 'பொதுவில் நடம்புரியும் இடம்' என்பார் வள்ளலார்.

ஊர் மக்கள் கூடும் கூட்டம் பொதுக் கூட்டம், பொதுமக்கள் என்று வழங்கப்படுவர். ஆதலால், அவையில் பொழியப்படும் செய்தியும் பொதுமையுடையதாய் அமைதல் வேண்டும்! எவரையும் பண்படுத்தும் உரையையன்றிப் புண்படுத்தும் உரையை உரையாமை வேண்டும். சார்பு இல்லாச் சால்பு அது.

கட்சிக்கூட்டம் - சமயக்கூட்டம் - சாதிக்கூட்டம் - என இக்கால் பலவகைக் கூட்டங்கள் நிகழ்தல் கண்கூடு. அங்குச் சார்பு தலைதூக்கும். அங்குச் சால்பாளர் பொழிவு சார்பற்றுத் திகழுமாயின் பலரும் அவ்அவ்வெறி, தடிப்பு, முட்டல், மோதல், இல்லாராய் வாழ்வதற்கு வழிப்படுத்தும்.

உள்ள சார்பைச் சால்பாக்க விரும்பாமல் மேலும் சார்பும் சார்பு வெறியும் ஊட்டுவர். இச்சார்பு வெறியைப் பயன்படுத்தித் தம் நலம் காண்பார் அன்றி, மாந்தநேயம் உடையார், அல்லர்! குளிர்போக்க எரிதுரும்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் தம் நல வேட்கையர் ஆவர்! மன்பதை எக்கேடு கெட்டாலும் கெடட்டும்; யானும் என்னைச் சார்ந்தாரும் கொழுத்து வாழவேண்டும் என்னும் சுருங்கிய மனத்தர்; வரலாற்றில் பொக்கு - பதர் போலக் காற்றடிக்கும்போது கடந்து போகக் கூடியவர் ஆவர். வெறியூட்டும் பொழிவு பொதுமைச் சால்பு கொண்டார் செய்யார்! அவர் மாந்தநேயர் ஆகமாட்டார் எனின் ஆன்மநேயர் ஆவரா?

தம்மைச் சார்ந்தாரைப் பண்படுத்திப் பகையும் பழியும் இல்லா வாழ்வு வாழ வழிகாட்டுபவரே சார்பிலாச் சால்புப் பொழிவாளராம்! அவர் சார்பு அரங்கையும் சால்பரங்கம் ஆக்கும் சான்றோர். அவர் உலகம் உய்ய வழிகாட்டும் உத்தமர்; உரவர்; வாழ்வியல் காட்ட

வந்த வாய்மை நெஞ்சர்! தம்தம் சமயத்தை - சாதியை - கட்சியை மற்றொரு சமயத்திற்கோ சாதிக்கோ கட்சிக்கோ எதிரிடையாக்க எள்ளத்தனையும் எண்ணாத் தலைமையர் எவர்? சேவல் போர், கடாப்போர் எப்படி நிகழ்கின்றன? மூட்டிவிடுவார் மூட்டுதலால் தானே நிகழ்கின்றன. மக்களை மாக்களாக்கும் வெறியர் - வெறித் தலைமையர் - வெறிப் பொழிவர் - தம்மால், தமிழினம் தொடர்ந்து அழிந்து வருவதாலேயே தமிழினம் வேற்றாருக்கு இடம் தந்து கொத்தடிமையாய் உள்ளது! அவரவர் நிலையில் அவரவர் நின்று, அவ்வாறு நிற்பாரை மதித்து நடந்தால் - அவ்வாறு நடக்க நாவன்மையர் பொழிவாற்றினால் எக்கட்சி - எச்சமயம் - எச்சாதிப்பிணக்குத் தலை காட்டமுடியும்?

கல்வியறிவில்லாக் காலத்து மக்கள் கண்மூடியாக இருந்தனர் என்பது கற்றவர் சூழ்ச்சியால் என்றால், இக்காலக் கட்சி - சமய - சாதித் - தலைமையர் விரிவிலாச் சுருக்கத் தந்நலம், தமிழ் இனத்தை முழுவதாகக் கெடுப்பதுடன், மேல் மேலும் கெடவே வழி செய்கின்றது. ஆதலால், அயற்கேட்டைத் தாங்கும் தூண்களாக இருந்து தமிழினக் கேடராகவே உருவாக்கிக் கொண்டுள்ளனர்!

எந்த ஒன்றிலேயாவது ஒன்றுபட்டு நிற்கின்றனரா? நிற்க விடுகின்றனரா? சமயமோதல் கதைகள் தெய்வப் பேரால் கண்டது இந்த மண்! சாதி உயர்வு தாழ்வாக்கி மீளா எரி நிரயம் ஆக்கியது தன்னல வாழ்வுக் கூட்டம். இவ்விரண்டையும் விஞ்சக் கட்சியின் பெயரால் மற்றை வெறிகளையும் ஒரு சேர உண்டாக்கி விடுகின்றன. கட்சித் தலைமைகள் இதுகால்! இக்கட்சியான் அக்கட்சியானொடு உறவு கொள்ளவும் -நட்பாடவும் - கொண்டு கொடுக்கவும் - தடைவிதிக்கின்ற நிலையைப் பார்க்குங்கால் "சீசீ! சிறியர் செய்கை" என்று பாரதி சொன்னதைத் தானே சொல்ல நேர்கின்றது!

வெறியூட்டும் பொழிவாளரை உருவாக்கல் - ஊர் ஊர்க்கு விடுத்தல் - மடிநிறையப் பணம் வாரல் - இவற்றுக்குப் பொழிவுக் கூட்டம் கலைக்கூட்டம் உண்டு என்றால், என்றாவது ஒன்றுபடமுடியுமா?

> **"நாட்டு மாந்தரெல்லாம் ஆட்டு மந்தையாய்**
> **ஆக்கி விட்டார்"**

என்று அதே பாரதி கூறியதை மெய்ப்பிப்ப தல்லவா!

பொழிவு என்பது என்ன?

மழை - அது, பொதுமையானதா? தனித்தனியே நேர்ந்தும் விலக்கியும் பொழிவதா? "மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?" என்பது கபிலரகவல்!

சொல் என்பது என்ன?

நெல்! மணியில்லாதது நெல்லா? பதர்தானே! பதடி என்பதும் அதுதானே!

**"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு"**

என்பது நம் பொதுமறை அல்லவா!

**"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத் துள்ளதூஉம் அன்று"**

என்பதைப் பொழிவாளன் போற்றத் தவறுதல் அவன் பொழிவாளன் அல்லன் கழிசடைப் பிறவியன் என்பது தானே!

எந்நிலையிலும் சால்பு குன்றாப் பொழிவாளனே குன்றம் அன்னவன்! மலையன்னவன்! மலைத் தொடர் அன்னவன்! மலையினும் மாணப் பெரியன்! 'மலைமேல் ஏற்றிய விளக்கன்' என்பவன் அவனேயாம்!

❖ ❖ ❖ ❖

# 3. நடுமை

சார்பிலாச் சால்பு சார்ந்ததே நடுமையாகும். நடுமை நடுவுநிலைமை. வழக்காடி தாம்தாம் எடுத்துக் கொண்டதைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் மறைத்தும் உள்ளதை இல்லதென்றும் இல்லதை உள்ளதென்றும் தாம் குற்றவாளி அல்லர் எனக் காட்டுவதற்காக எப்படியும் உரைக்கலாம். அவற்றில் மெய்ம்மம் பொய்ம்மம் கண்டு சீர்தூக்கிச் சொல்லைக் கொண்டு மட்டும் துணியாமல் தீர ஆய்ந்து குற்றமற்றவன் தண்டிக்கப்படாமலும் குற்றவாளி தண்டனைக்கு ஆட்படாமல் தப்பித்துக் கொள்ளாமலும் நடுவுநிலை கண்டு தீர்மானிப்பதே நடுமையாம். பொழிவாளன் பொழிவுக்கும் இந்நடுமை வேண்டத் தக்கதாம்.

பொழிவு என்பது வாய்வந்தவாறும் தான் எண்ணியதே சரியானது என்றவாறும் பொழிவது அன்று. அவையிலுள்ளார் ஒப்பும் வகையில் உரைப்பதாக இருப்பதே மெய்யுரையாளன் என்பதைக் காட்டும்.

பட்டிமன்றம், வழக்காடு மன்றம், மேல்முறையீட்டு மன்றம், அரட்டை அரங்கம், அகடவிகடம் எனப் பல கோணக் கூத்தாட்டங்கள் பொழிவாக ஏற்பட்டுள்ள காலம்! நகைச்சுவையே மையமாகவும் வேடிக்கை செய்வதே விளக்கமாகவும் போய்விட்ட நாளை இது! இவற்றில் மேடைதோறும் ஊர்தோறும் மாறிமாறி வைத்த கருத்துக்குத் தக முடிவெடுப்பது உண்மைக்கு மறுதலையாம். கருத்துகளை உரைக்கும் வல்லமையால், பொய் மெய்யாகவும், கருத்துகளை எடுத்து வைக்கும் வல்லமை இல்லாமையால் மெய் பொய்யாகவும் அமையக் கூடும். ஆனால், நடுமை அச்சொல்வன்மை, நடுமைப் பொருள் கண்டு தெளிவிப்பதே பொருளுக்கும் பொருளுரை கண்டார்க்கும் பெருமையாம்.

நடுமை என்பது மாறிமாறி வேடம் புனைந்து ஆடும் கூத்தன் அல்லன். எவர் ஆயினும் கணக்கைப் போல நான்கை நான்கால் உறழப் பதினாறு ஆவது போல் செவ்விதாக இருக்கவேண்டும். 15 என்பதோ 17 என்பதோ செவ்விதாகாமை போல இருத்தல் வேண்டும். உண்மைக் கேட்டினும் கேடானது உண்மையை மறைத்துக் கண்டும் கொண்டும் கூறும் முடிபு. ஆதலால், முறை மன்ற நடுவர் ஒப்பப் பொழிவாளரும் நடுமை போற்றி உரையாற்றல் கடமையாம்.

ஒரு கூட்டத்தில் கேட்டவர் அடுத்த கூட்டத்திலும் கேட்கலாம். அக்கூட்டத்தில் அப்படி உரைத்தார்; இக்கூட்டத்தில் இப்படி உரைக்கிறார்; இவர் ஆளுக்குத்தக இடத்துக்குத்தக உரைப்பார் என்னும் எண்ணம் ஏற்பட்டுவிட்டால் அவர் கூறும் செய்தி எதுவும் நம்பிக்கை அற்றதாகப் போகிவிடும். நடுமையும் நடுமையற்ற மதிப்பீட்டைப் பெற்றதாகும். சொல்லிலே நடுமை காணார் செயலில் நடுமையாக இரார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றும் ஆகிவிடும்.

பொழுதுபோக்கு வேடிக்கை தானே இப்பேச்சு! நகைப்புக்காகத் தானே சொல்வது என்றால், காலத்தின் அருமையும் கடமை மேம்பாடும் அறிந்து கடனாற்றாக் கயமையே அஃதாகி இழிமையாம்! சிரிப்பார் சிரிப்பினும் சிந்திப்பார்க்கு, "இவர் கொண்டது அறிவா, பண்பொடு கூடுவதா, ஆக்கம் செய்வதா?" என்னும் எண்ணங்களை ஊட்டாமல் போகா. ஆதலால், நடுமை போற்றல் இன்றியமையாததாம். தாம் சார்ந்த சார்பை முன் வைத்து வழக்காடுவார் உரைபரப்புவார் தம் தலைமைக்குத் தகப்பொழிவார் கட்சி மேலிடக் கொள்கை கொண்டு பொழிவார்.

ஒரே செயலையே இருவரும் செய்திருந்தாலும் ஒருவர் செய்தது தவறாகவும் ஒருவர் செய்தது செவ்விதாகவும் சொல்லலோ இரண்டையும் எடுத்துக்காட்டாமல் மழுப்புதலோ, இட்டு மொழிந்து இருபக்கமும் சரியே என்பதோ சொல்வாரை நடுமையராகக் கொள்ளாமல் தடைப்படுத்தும். பொழிவின் மற்றைச் சீர்மையையும் கெடுக்கும்.

பொதுமக்கள் முன்னர்ப் பொழிவு, சட்டமன்ற நாடாளுமன்ற, அறங்கூறவைய முன்னர் எடுத்துரைப்பு ஒப்பதே. அவற்றினும் மேம்பட்டதே என்ற உணர்வுடைய பொழிவே சிறப்புடையதாகக் கொள்ளப்படும்.

**"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்".**

என்பதற்கு ஏற்பவும், "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்தொரு பால், கோடாமை சான்றோர்க்கணி" என்பதற்கு ஏற்பவும், பொழிவு அமைதலே கேட்பவரைப் பிணிக்கும், கேளாரும் கேட்கத் தூண்டும்!

இனி மொழிநடை பற்றிக் காணலாம்.

❖❖❖❖

# 4. பொழிவின் நடை

ஒரு பொழிவைக் கேட்பவர் மொழிச் செம்மையைக் கூறாமலே அறிந்து கொள்ளும் வகையில் இருத்தல் வேண்டும்.

மொழிச் செம்மை என்பது கடுமையில் இல்லை. வழக்கில் வழங்காச் சொல்லைச் சொல்லலிலும் இல்லை. கொச்சை வழு கலப்படம் இல்லாச் சொல்லாக அகராதி கொண்டு அறியவேண்டும் சொல்லாக இல்லாமல் பொதுமக்களும் புரியும் வகையிலும் இருத்தல் வேண்டும்.

அறிவறிந்தவராய், பொழிவு வல்லாராய் இருப்பாரே கொச்சையும் வழுவும் கலப்பும் கயமையும் கொண்டு பேசினால், அது மொழித்திறம் இல்லார்க்கு எடுத்துக்காட்டாய் அவர்கள் கொண்டிருந்த தூய்மையைக் கெடுக்கவும் துணையாகிவிடும். கூடியுள்ள அவையின் நிலையை அறிந்து நடையை எளிமை சமன்மை சற்றே அருமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மழலையர் முன் ஆய்வுப் பெரும் பொருளை அருந்தொடர்களால் விளக்குவதோ, ஆய்வர் முன் மழலையர் முன் பொழியத் தக்க பொழிவைச் செய்வதோ தக்கவை ஆகா. அவையிலுள்ளார் அகவை, அறிவறி நிலை, அவைப் பொருள், நோக்கு என்பவற்றைக் கருத்தில் கொண்டு எளிமை அருமை இயன்மை வகைகளில் பொழிதல் வேண்டும். மெல்லெனக் கூற வேண்டியதை மெல்லெனவும், ஓங்கிக் கூற வேண்டியதை ஓங்கியும், இசைத்துக் கூற வேண்டியதை இசைத்தும், மீளக் கூற வேண்டித் தெளிவுறுத்த வேண்டியவற்றை மட்டுமே மீளக் கூறியும் சொல்லும் செய்தியை நிறுவும் சான்று, மேற்கோள், கதை, ஒப்பு முதலியவற்றை அவ்வவ்விடத்தே சொல்லியும் இயல்புநிலையில் கூறுதல் பொழிவை வெலச் செய்யும் பெருமையதாம். வெலச் சொல்லுவார்க்குப் பாராட்டுத் தேடுவதாக இல்லாமல், கேட்பார்க்குப் பயன் செய்வதாக இருக்கவேண்டும்.

இசைத்திறம் அமைந்தார், அரிதான இடங்களில் மட்டும் இடைஇடை இசைத்தல் கேட்டற்கு இனிதாம். அதனை விடுத்துப் பொழிவையே இசையாக்கி விடுதல் வெளியே செல்லும்பொழுது என்ன சொன்னார் என்பதே இல்லாமல் ஆகிவிடும்.

நகைச்சுவை உயர்சுவை! அதனாலேயே மெய்ப்பாடுகளைக் கூறும் தொல்காப்பியர் 'நகையே' என முன் வைத்தார்! அந்நகைச்சுவை நடையில் இல்லாமல் எடுத்த கருத்தில் அமைதலே பயனாம். அதுவும் பிறரைப் புண்படுத்தா நகையாகவும் இருத்தல் வேண்டும். நகைச்சுவை உயர் சுவையெனக் கொண்டு பொழுதெல்லாம் பொருந்தா நகைச்சுவைச் செய்திகளைத் தேடித்தேடி வைத்தல் நகைச்சுவைக் கேடாகவே அமையும். வேடிக்கைப் பொழிவராக ஆக்குமே அல்லாமல் வினைநலம் மிக்க பொழிவாளர் என்னும் பேற்றை அது தாராது.

குழந்தைக்கு ஊட்டும் உணவுக்கும் கடிய உழைப்பருக்குத் தரும் உணவுக்கும் மூளை உழைப்பர்க்கு வழங்கும் உணவுக்கும் வேறுபாடு இல்லையா! அவ்வேறுபாடு உணர்ந்து தக்கார்க்குத் தக்கதைத் தருதலே தந்த பயனும் நயனும் உடையதாய் அமையும்.

சொல்வகையுள் ஒன்று 'செலச் சொல்லல்'; கேட்பார் கொள்ளும் வகையிலும் புரிந்து தெளிந்து செயல்படும் வகையிலும் அமைவதே செலச் சொல்லலாம். செலச் சொல்லல் என்பதை 'வெலச் சொல்லல்' என்பதும் தகும். புரிந்து கொள்ளும் சொல் வெற்றிச் சொல்லாகத் தானே அமையும் ஆதலால் என்க.

நடை ஆற்றோட்டமாக அமையும் சிலர்க்கு! சிலர்க்கு அருவி முழக்காக வெளிப்படும். சிலர்க்குக் கல்லை ஊடறுத்துப் பாயும் சலசலப்பாக இருக்கும். சிலர்க்குத் தூவானம் தூவுவது போல் அமையும். சிலர் அரிய செய்திகளையும் வாழைப் பழத்தில் ஊசி இறக்குவது போல் எளிதில் கூறவல்லாராய் இருப்பர். சிலர் எளிய செய்தியையும் கல்லில் முட்டுவது போல் ஆக்கிவிடுவர்.

சிலரோ இடைநிறுத்தி இடைநிறுத்தி நடைத் தொய்வுபடப் பொழிவர்! சிலர் சொல்லுக்கும் சொல்லுக்கும் இடைவெளிப்படாமல் படபடத்து என்ன சொல்கிறார் என்பது கேட்பவர்க்குப் புரியாமலே போய்விடுவது உண்டு. அவர் என்ன பேசினார் எனப் புலப்படாமலே பொழுதைப் பாழாக்கிய ஒன்றே நிற்கச் செய்துவிடும்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் பொழிவு நடை அமையும். சிலர், சிலர் நடையைப் பின்பற்றுவர். அவர் நடையைப் பின்பற்றல் நடை, வெற்றி பெறாது. இயற்கைநடை என்பது அவரவர் நடையே! பிறரைப் பின்பற்றும் நடை எவ்வளவு முயன்றாலும் செயற்கை நடையே. உணர்வு வயப்பட்ட போதில் அது காலைவாரி விட்டு விடுதல் கண்கூடு.

மக்கள் வழக்கு, இலக்கிய வழக்கு என இருவகை வழக்குகள் இயல்பாக அமைந்தவை.

மக்கள் வழக்கில் இருந்து கிளர்ந்தவையே இலக்கிய வழக்கு ஆகிய புலமையர் வழக்குகள். உரையாசிரியர்கள், பாடல் ஆசிரியர்கள் வழக்குகள் ஒன்றுபட்டவை அல்ல. சில வரிகளைப் பார்த்த அளவில் இன்னார்நடை இது எனச் சொல்லி விடும் வகையில் அமையும்.

பொதுமக்கள் வழக்கிலும் அடுக்கு, எதுகை, மோனை, இயைபு, அளபெடை முதலியவை உண்டு என்பதைப் பழமொழி, விடுகதை, தாலாட்டு, ஒப்பாரி, நாட்டுப்பாடல் ஆகியவற்றால் நன்கு அறியலாம்.

எந்நடை ஆயினும் கேட்பார் நடையை உயர்த்துவதாய் இருக்கவேண்டுமே அல்லாமல் கீழே இறக்குவதாய் அமைதல் ஆகாது. சிலர் எண்ணம் பொதுமக்கள் நடையில் பேசினால் தான் அவர்களுக்குப் புரியும் எனக் குழாயடிப் பேச்சு, தெருச் சண்டைப் பேச்சு என்பவற்றைப் பின்பற்றல் அவர்களை மேலும் தம்நடையைத் தாழ்த்தவே வழிவகுக்கும்.

ஆங்கிலக்கலப்பு ஆரியக்கலப்பு நடைகள், கல்லாத மக்களையும் கற்றோர் நடையால் கெட்டொழியச் செய்யும். ஆதலால் கற்றோர் நடை மிடுக்குடையதாய் இருக்கவேண்டும் என்பது இல்லை. பொதுமக்கள் நடையைத் தாழச் செய்வதாய் அமைதல் ஆகாது.

வேற்றுச் சொல் கலப்பே புதுக்கவிதைக்குப் பொலிவு என்னும் புற்றீசல் நடை ஒன்று உருவாகிவிட்டது.

‘மகப்பேறு’ புரியாதா, ‘பிரசவம்’ ஆகவேண்டுமா?
‘பூ’ புலப்படாதா, ‘புட்பமாய்’ நிற்கவேண்டுமா?
‘மகிழ்ச்சி’ புரியாதா, ‘சந்தோடம்’ தான் புரியுமா?
‘ஆண்டு’ அறியாரா? ‘வருடமா’ வரிந்து கட்டவேண்டும்!
‘தலை’ இருக்க ‘சிரச்’ எதற்காக?
‘செய்தி’யிருக்க ‘விடயம்’ ஏன்?

இவை வேதிய வழி என்றால், கல்வியறிவில்லாமல் ‘கீறல்’ வைப்பாரும், ‘நைட்’, ‘லைட்’, ‘கரண்ட’, ‘ரோடு’, என்பது கற்றோரால் கெட்டகேடு தானே!

அவர்களுக்கு நைட், லைட் தானே தமிழாகத் தெரிகின்றது. 'ஆசுபத்திரி' புரிகிறதாம்! 'மருத்துவமனை' புரிய வில்லையாம். 'சூசு' புரிகிறதாம்! 'பழச்சாறு புரியவில்லையாம். 'பேப்பர்' புரிகிறதாம்! 'தாள்' புரியவில்லையாம்! எதனால்? நான் கெட்டகேட்டை நீயும் கெடு என்று கற்றோர் வைத்த 'தீ' தானே அது.

இயல்பான 'பருப்புக்குழம்பு', 'சாம்பார்' ஆகி எங்கும் ஆட்சி புரியவில்லையா?

'மிளகுச்சாறு' போய் 'ரசம்' கோலோச்சவில்லையா?

'சோறு' போய் 'சாதம்' கொலுவிருக்கவில்லையா?

பச்சைக்காய்களால் செய்தது 'பச்சி' தானே!

சலசல என ஒடுவது சலம் தானே.

சவட்டுதலில் வந்த சவளி,

சுவடியால் வந்த சுவடி, சோடி கிரந்தமாயது.

அறிந்தார் அறியாரைக் கெடுத்த கேடு தானே! அது பரம்பரையாய்த் தொடரச் செய்த மொழிக் கொலை, மொழியைக் கெடுப்பார் கேடு தானே!

கேட்கும் மக்களைப் பொழிவு உயர்த்துவதாக இருக்க வேண்டுமே அன்றித் தாழ்த்துவதாய் அமைதல் ஆகாதாம்.

❖❖❖❖

# 5. சூழல்

சொற்பொழிவு ஆற்றுவார் சூழலை அறிந்து கொள்ள வேண்டும். ஊர்ப்பெயர், ஊர் சார்ந்த ஊர்கள், ஊரின் மண், விளையும் பொருள், நீர்நிலை, மக்கள் தொழில், பழக்க வழக்கம், அழைக்கப்பட்ட அவை, மேடை அமைதி, மேடையில் உள்ள தொங்கல் வரைவு, சுவரில் மாட்டப்பட்ட படங்கள், கூடியுள்ள கூட்டத்தார், தலைமையர், உடன் உரையாளர் அவை கூட்டப்பட்ட நோக்கு இவையெல்லாம் அறிதல் சூழல் அறிவாம்! இவற்றொடு தமக்குத் தந்த தலைப்பு, அவை கூட்டப்பட்ட நோக்கு, கேட்பவர் நிலை என்பவற்றை அறிதலும் சூழலியலே!

இவற்றை அறிந்து கொண்டவராய்ப் பேசினால் தம் உரையை எப்படித் தொடங்கின் சால்பாம், சரியாம், உளங்கொளச் செய்யும் என்பது தெளிவாகித் தொடங்கும் உத்திமுன் வந்து நிற்கும்.

தொடங்கும் தொடக்கமே வெற்றியில் பாதியை வழங்கி விடும். கேட்பவரைத் தூண்டிவிட்டு ஒருமுகமாகக் கேட்க வைக்கும். எடுத்த எடுப்பில் உண்டாகும் கவர்ச்சியே தொடர்ச்சியாய்ப் பல்நோக்கரையும் ஒரு நோக்கராய் ஆக்கிவிடும்! ஊரின் பெயர் அதற்கு அப்பெயர் வந்த அடிப்படை, அவ்வூரின் அமைப்பு, அவர்கள் செய்யும் தொழிற்சிறப்பு, வழிநடைக்காட்சி, மேடைப்பொழிவு, சுவரில் மாட்டியுள்ள படங்கள், மேடைத் தொங்கல் விளக்கம் என்பவற்றைச் சுட்டிக்காட்டித் தொடரும் அளவில் எவரும் வயப்படுவர்.

உழவர், கைத்தொழிலர், ஆலைத்தொழில், மாணவர், மகளிர், முதியரவை, கலைவல்லார் என அறிந்து கொண்டு பேசும் பேச்சே வெற்றிப்பேச்சாம். மரத்தடி, மாடி, கூரை, ஓட்டுக் கட்டடம், மலைவாரம் இவற்றைக் கொண்ட கூட்டத்தில் அவற்றை முன்னெடுத்து மொழிதல் தொடர்ந்து உள்வாங்க வைக்கும்.

மேல்நிலைப்பள்ளி ஒன்றன் கூட்டம். சுவரில் இருந்த படங்களைச் சுட்டுகிறார். வள்ளுவர், காந்தி, வ.உ.சி., வள்ளலார் என நீள்கிறது. தாளாளர், தலைமையாசிரியர் எனவும் செல்கிறது.

பெயரைக் கேட்கிறோம்! மாணவர் சொல்கின்றனர்! இவர்கள் தம் தொண்டாலும் பண்பாலும் நெஞ்சில் இடமாகியவர். இப்பொழுது சுவரில் படமாகிப் பொலிவுடன் விளங்குகின்றனர்!

நீங்கள் இப்படி எதிர்காலத்தில் விளங்க முடியுமா?

அவர்களை அறியுங்கள்! அவர் பண்பைக் கொள்ளுங்கள்! அவர்கள் செயலை நோக்குங்கள்! அவராவீர்கள் என்று தொடங்கினால் மறவாது.

இதோ என்ன எழுதிப் போடப்பட்டுள்ளது? 'கற்க, நிற்க', 'உழைக்க உயர்க' இவை மணிமொழிகள் அல்லவா! நல்ல தூண்டல்கள் அல்லவா!

ஓட்டுக்கூரை; அதன்முன் கூட்டம்! இக்கட்டடக் கூரை எது? 'ஓடு'.

'ஓடு' என்ன சொல்கிறது?

வாழ்வில் ஓயாதே! சோராதே! ஓடு! உழை! உயர்! என்னவில்லையா?

இதோ மரத்தடி! இது என்ன மரம்?

வேப்பமரம்! வெப்பு - வேப்பு! வெப்பக் காலத்திற்குக் குளுமை வழங்கும் மரம்! வேம்பன் - பாண்டியன்! அவன் மாலை வேப்பமாலை! வேப்பம் பூ ஒரு பாவலனைக் கவர்ந்தது. அவன் இயற்கை ஈடுபாட்டாளன்! நண்டின் கண்களைக் கண்டவன். வேம்பின் அரும்பையும் நோக்கினான்! வேம்பின் அரும்பு போன்ற நண்டின் கண்கள் என்றான்.

அம்மை நோய் கண்டால் வேப்பங்குழை கட்டுகின்றனர். சித்திரை பிறந்தால் வேப்பம்பூச் சாறு (ரசம்) வைக்கின்றனர். வேம்பு மருந்து; மருந்து மரம்! வள்ளுவர் உள்ளங்கவர்ந்த மரம்.

**"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்"**

எனப்பாடு புகழ் பெற்றது.

வெயிலை நாம் தாங்க முடியவில்லை! கீழே அமர்ந்துள்ளோம்! அது காய்கிறது வெயிலில்! நமக்கு நிழல் தருகிறது! நமக்கு ஆறறிவு. அதற்கு ஓரறிவு!

நாம் காய்ந்தால் சீறுகிறோம். அது காய்ந்தால் காய்க்கிறது; பறவைகளுக்கு உணவாகிறது; நமக்கு எண்ணெய் ஆகிறது. நாம் விடும் நச்சுக் காற்றை எடுத்துக் கொண்டு நமக்கு அமுதக் காற்றைத் தருகிறது. நஞ்சுண்டு அமுதம் தந்தான் இறைவன் என்பதை இம்மரம் சொல்லாமல் சொல்லி வழிபட வைக்கிறது!

இவ்வாறு பல்லபல வகையில் சூழலைப் பயன்படுத்திக் கொண்டால் கேட்பவர் உள்ளம் ஈர்க்கப்படும். சிந்திக்கத் தொடங்கும். பொழிவும் வெற்றி பெறும். நாட்டுத் தொண்டர் படைஞர்க்குப் பொழிவு! தலைப்பு, தொண்டு! தொண்டர்படைப் பேராசிரியர், "கால்மணி நேரத்திற்கு மேல் கேட்க மாட்டார்கள்; அதைப் பார்த்துச் சுருக்கிக் கொள்ளுங்கள்" என்றார்! நான் பார்த்துக் கொள்கிறேன்! இன்னார் பேசுவார்! என்று சொல்லி அமருங்கள் என்றேன். அவர் தலைமை ஏற்றவர், 'இறைவணக்கம்' என்றார்.

ஒரு செல்வி வந்தார். "தோடுடைய செவியன்" பாடினார். நல்ல இசை! பொருள் விளங்கிப் பாடியவர் அவர்.

தலைவர் சுருங்க உரைத்து இன்னார் பேசுவார் என்றார். நான் வழக்கமாகச் சொல்லும் தமிழ்வாழ்த்துப் பாடினேன். இறைவணக்கம் பாடிய செல்வியை அழைத்தேன்.

நீ பாடியது என்ன பாட்டு? எவர் பாடியது? எவரைப் பாடியது? என்றேன். தெளிவாகச் சொன்னார்.

சிவன் தோடு அணிவானா? நீ அணிந்தது - மகளிர் அணிந்தது தோடு!

தோடுடைய செவியள் என்றல்லவா பாடல் இருக்கவேண்டும்! "அம்மையையும் அப்பனையும் ஒருருவில் கண்டதால் 'தோடுடைய செவியன்' என்றார்.

பெண்ணுரிமை பேசுகிறோம் இன்று! பெண்ணின் பெருமை பேசுகிறோம்! நீங்கள் இடைவெளி விட்டு இருபாலாக அமைந்திருக்கும் தோற்றம் அம்மை அப்பன் தோற்றம் அல்லவா! இடப்பாகம் பெண்பாகம். அதனால் அப்பாகத்தில் தோடு அணிந்தான் எனத் தொடங்கி அப்பாட்டைக் கொண்டே 'விடையாம் காளை'யின் தொண்டு, நிலவின் தண்மை, சுடலைப் பொடி, ஏடு, மலர், பீடு என்பவற்றைக் கொண்டே ஒன்றே கால்மணி நேரம் தொண்டை விளக்கினேன்!

ஓர் ஒலி! ஓர் ஓசை! இல்லை!

கையெழுத்து முந்தி முந்தி வந்து பெற்றனர்!

எப்படி மயக்கினீர்கள்? என்றார் தலைவர்!

வரும்போது நீங்கள் கேட்டீர்கள் அல்லவா! என்றேன்.

சொற்பொழிவு ஓர் ஒப்பற்ற கலை என்றார்!

கலையாவது, கலை ஆக்குவானைப் பொறுத்தது!

நகைச்சுவையாகப் பேசினால் தான் கேட்பார்கள்; அதை மனத்தில் கொண்டு உரையாற்றுங்கள் என்றார், மகளிர் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர்!

ஐந்நூறு பேரைச் சிரிக்க வைப்பதிலும் ஐம்பது பேரைச் சிந்திக்க வைப்பதே சொற்பொழிவுக்குச் சிறப்பு. நீங்கள் இன்னார் பேசுவார் என்று சொல்லி அமருங்கள் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றேன். அவர் சில சொற்களால் அறிமுகம் செய்து இன்னார் பேசுவார் என்றார்.

கல்லூரியின் பெயர் மீனாட்சி கல்லூரி. நான் தொடங்கினேன்! நீங்கள் அனைவரும் பேர்த்திகள்! அமுதச் செல்வங்கள்! அமுதச் செல்வங்கள் கூடிய இடம் அமுத நிலையம்! இதை நான் சொல்லவில்லை! கொஞ்சும் தமிழ் வல்ல குமரகுருபரர் பாடினார். உங்கள் கல்லூரிப் பெயர்க்கு மூலமானவரைப் பாடினார்! என்ன பாட்டு? தாலாட்டுப் பாட்டு. "அங்கயற்கண் அமுதே தாலோ தாலேலோ" அங்கயற்கண்ணி யார்? மீனாட்சி!

மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் பாடினார்! தமிழ் அமிழ்தைப் பாடினார்! தமிழை எப்படிப் பாடினார் - எனத் தொடங்கிக் குமரகுருபரர் தமிழைப் பற்றிப் பாடியவற்றையும் காசி சென்றதையும் காசியில் தமிழ் வளர்த்ததையும் விரியக் கூறினேன்! பன்மொழி கற்க! தாய்மொழித் தொண்டை மறவாது நிற்க என ஏறத்தாழ ஒரு மணிக்குமேல் பேசினேன்! எனக்குக் கை கொடுத்தது கல்லூரிப் பெயர்!

நாவசைக்க வைத்தது குமரகுருபரர் அமுதத்தமிழ்!

அறிமுகப்படுத்தியவர்க்கு வியப்பானால் வியப்பு! பட்டிமன்றம் - நகைச்சுவை மன்றம் - என்பனவே கவரும் எனக் கருதியவர்க்கு ஒரு புது நோக்கு! வியப்பு! உளங்கொளச் சொல்லல் தனி ஆற்றல் என்றார். நீங்கள் முயன்றாலும் முடியும்! தனிப்பட்ட எவருக்கும் உரிமைப்பட்டது இல்லை. அதிலும் தமிழ் நம் தாய்மொழி! இயலாமை என்பது நம் இயலாமை அன்றி நம் மொழி இயலாமை அன்று என்றேன்.

❖❖❖❖

**திரு.வி.க. வின் முதல் புரட்சி**

பொதுக் கூட்டங்களில் தமிழர்கள் தாய்மொழியிலேயே பேசுதல் வேண்டும் என்றும், அயல் மொழியில் பேசுதல் கூடாதென்றும், எவரேனும் அயல் மொழியில் பேசப் புகுந்தால் அவரைத்திருத்தும் பொறுப்பைப் பொது மக்கள் ஏற்றல் வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்... என் பேச்சும் எழுத்தும் தக்கபயனை விளைத்தன... என் வாழ்வில் நிகழ்ந்த முதல் புரட்சி இஃது ஆகும்.

தமிழ்த்தென்றல்

**திருவாளர். திரு.வி.கலியாணசுந்தரனார்**

# 6. பொருள்

பொழிவாளர்க்கு 'இன்னபொருளில் பேசுவார்' என்று குறிப்பிடல் உண்டு. தலைமை, வரவேற்பு, சிறப்புரை, தொடக்கவுரை, நிறைவுரை என அமைவனவும் உண்டு.

அறிஞர் அண்ணா ஒரு கூட்டத்திற்கு வந்தார். அவர்க்குப் பேசும் பொருள் தரப்படவில்லை. அவர் உரையைத் தொடங்கினார். எனக்குப் பேசும் பொருள் தரப்படவில்லை. ஆதலால், 'பொருள்' எனப் பேசுகிறேன் என்று பொழிந்தார்! பொழிவு ஒரு சுவடியாகியது. அதன் பெயர், 'பொருள்' என்பது.

இன்னொரு கூட்டம்; அண்ணாவுக்குப் பேசும் பொருள் கரும்பலகையில் இருந்தது எப்படி? ஒரு பெரிய வட்டம்; அதன் உள்ளே ஒரு புள்ளி. அவ்வளவே! அண்ணா தொடங்கினார். "உலகத்தில் நாம்" எனத் தலைப்பாக்கிக் கொண்டார். அருமையான நுண்ணோக்கு அல்லவா!

பொருள் தந்தாலும் தாராவிட்டாலும் பொருளமைந்த - பயன் பொருள் அமைந்த - பொழிவாக அமையவேண்டும்!

எந்நிலையிலும் 'சொல்' என்பது 'நெல்' என்னும் பொருள் தருவது. மணியில்லாதது 'நெல்' எனப்படாது; 'பதர்' எனப்படும்; பதடி என்பதும் அது. அதனைப்,

**"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்**

**மக்கட் பதடி எனல்"**

என வள்ளுவர் கூறுவதை மறவாமல், பொழிவாளர் கொள்கையாகக் கொள்ளல் வேண்டும்.

கொடுத்த தலைப்புப் பற்றி அளவில்லாத செய்திகளை அறிந்தவராக இருந்தாலும் அவற்றையெல்லாம் கொட்டிவிட வேண்டும் என எண்ணிப் பொழிதல் பொழிவாளர்க்கும் கேட்பாளர்க்கும் உகந்த தாகாது. உயரிய பொருளே எனினும் காலஅளவு போற்றப்படல்

கட்டாயம் வேண்டும். சிறந்த சிலவற்றைச் சொல்லி மற்றவற்றை அவர்களே கற்றறியத் தூண்டுதல் பெரும்பயன் ஆகும் அல்லவோ!

கொடுத்த பொருளுக்கு உரிய செய்திகள் இல்லாமல் மேடையை வறட்சியுறச் செய்தல், எடுத்த பொருளை விடுத்து தொடர்பில்லாத அடுத்த பொருளை விரித்துக் கூறல் அவைக்கு வெறுப்பூட்டவே செய்யும். அந்நிலையில் தெளிவாக அறிந்த செய்தியை மட்டும் சுருங்க உரைத்து அமைதலும் நலமேயாம்.

ஓரவையர் தம்கருத்துக்கு ஒவ்வாத் தலைப்பு ஒன்றைத் தந்து பொழியச் சொன்னால் நாகரிகமாக அதனை மறுத்து விடுதலே நலம். தலைப்பை ஏற்றுக் கொண்டு முரண்பட்ட கருத்தை வைத்தல் அவைக்கும் அழைத்தவர்க்கும் வெறுப்பூட்டவே செய்யும். முரணான தலைப்பை முகமனாக ஏற்றுக் கொள்ளல் தன் மனச்சான்றைக் கொன்ற செயலாகி விடவுமாம். ஒரு கூட்டத்தில் எந்தப் பொருள் நேரியது செவ்வியது என வலியுறுத்திக் கூறப்பட்டதோ அதே பொருளை மற்றொரு கூட்டத்தில் மறுதலித்தும், எதிரிடைப்பட்டும் பேசுதலால் உண்மை நேர்மை அற்ற கூலிப் பேச்சாளி எனப்படுவாரே அல்லாமல் கொள்கையாளர் என அவரைச் சார்ந்தோராலும் போற்றப்பட மாட்டார்! பாங்கறிந்து ஏறாப் பட்டிமன்றப்பாணி அதுவாம் என ஒதுக்கத்தக்கதாம்.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே" என்பது தொல்காப்பியப் பேராசான் ஆணைமொழி. அவ்வாறு அமைந்த தமிழ்ப்பொழிவு தடமாறிச் செல்லுதல் தக்கது ஆகாதாம். தனிப்பட்ட தோற்றம் - குடும்ப வாழ்வு - பணிநிலை ஆயவை பற்றியவற்றைச் சுட்டிக் காட்டும் எள்ளலால் கைதட்டுப் பெற வேண்டிக் கூறல், எதிர்மொழிவரையும் தூண்டி எடுத்த பொருளாய்வுக்கே உலை வைத்துவிடும்! 'வேடிக்கை மனிதர்' வாழ்க்கையாகி விட்ட நிலை இது!

பொழிவு என்ற சொல்லும், சொற்பொழிவு என்ற புணர் சொல்லும் உயர்வு மிக்கவை. பொழிவது மழை தானே! உயிர்தளிர்க்க வைக்கும் அமிழ்து தானே மழை. வான், ஒழுக்க மூலம்.

**"வானின் றுலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று".**

என்று தொடங்கி,

**"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு"**

என்று முடிவது தானே வான்சிறப்பு. அப்'பொழிவு' போல் அமிழ்தாகவும் ஒழுக்கத்தைப் பெருக்குவதாகவும் அல்லவோ சொற்பொழிவு இருத்தல் வேண்டும்!

ஆக்கத்திற்குரிய அறிவியல் படைப்புகளெல்லாம் அழிவுக்கும் இழிவுக்கும் உரியதாகி உருக்குலைப்பது போன்றதே ஆக்கத்திற் -குரியதாம் பொழிவை மொழிக் கேட்டுக்கும் இவர் செய்பவர் ஆவர். நாட்டுக்கு நல்வழி காட்ட வேண்டிய ஆசிரியர் பேராசிரியர் நூலாசிரியர்! வானிலே பறக்க வேண்டிய வெள்ளைப்புறா சேற்றிலே நெளியும் புழுவாகிவிட்ட தன்மை அல்லவோ இது!

இதனை வளர்க்கின்ற வளர்ப்புப் பண்ணைகள் திருக்கோயில்கள், செல்வக்கொழுமையாய்த் திகழும் பெருமக்களைத் தலைமையாகக் கொண்ட பெரும் பேரவைகள்!

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்ல தில்லை பொருள்"**

என்பதற்குச் சான்றானவர்கள்!

புழுத்த சாய்க்கடையின் ஊடே, பூக்கடையாகத் திகழும் பட்டிமன்ற வாணரும் இல்லாமல் இல்லை. அவர்கள் குழுவாயப் பொறுப்புணர்ந்தவர்கள். தம் தகுதியையும் தமக்கெனக் கொண்ட கொள்கையையும் காப்பவர்கள்; அத்தகையர் பணி தனிப்பொழிவு செய்யாத ஆக்கத்தையும் செய்வது என்னும் பாராட்டுக்கு உரியதாம்.

❖❖❖❖

# 7. மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பது தான் கண்ட காட்சிநிலை பொருள்நிலை ஆயவற்றிக்குத் தகத் தம் உடல் உள உரை ஆகியவற்றின் வெளிப்பாடு இருக்கும். அது போலிமை நடிப்பாக இல்லாமல் மெய்யாக வெளிப்படுவதாக அமையின் அவ்வமைப்பு அதனைக் காண்போர் கேட்போர் ஆகிய அவையோர்க்கும் பதிவாகிப் பொழிவார் நிலையும் கேட்பார் நிலையும் ஒப்பாகி இரண்டற்ற ஒருமைநிலை ஏற்படும். அவ்வாறு ஏற்படின் பொழிவு வெற்றிப் பொழிவாக மட்டுமன்றிப் பயன்பாட்டுப் பொழிவாகவும் ஆகிச் சிறக்கும். அது தக்க பொழிவாளர்க்கும் தக்க அவைக்கும் பேறாக அமைந்து பெரும்பயன் செய்தலால்,

**"உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**

**பாத்தியுள் நீர்சொரிந் தற்று"**

என்று சொல்லப்படும் (திருக்குறள்). வளரும் பயிருக்கு வான்மழை போல்வது அது என்பது தெளிவாம்.

வீறுமிக்க செய்தியைச் சொல்வதற்கும் வீழ்ந்துபட்ட செய்தியை உரைப்பதற்கும் வேறுபாடு வேண்டாவா?

உருகும் செய்தியை உரைப்பதற்கும் உருக்காக நிற்கும் செய்தியைக் கூறுவதற்கும் வேற்றுமை இல்லையா? இயல்பாக உண்டாகும் நகைச்சுவைக்கும் இட்டுக் கட்டுவதாம் நகைச்சுவைக்கும் வெளிப்பாடு ஒன்றாகுமா?

பொழிவாளர் கேட்பாளர் என்னும் இருமை இன்றி ஒருமைப்படுத்தும் மெய்யான மெய்ப்பாடே மேலும்மேலும் கேட்க வைக்கும்; கேளாரும் கேட்க வைக்கும்; கேட்டவரைப் பரப்பாள ராக்கி வைக்கும்.

எடுப்பு முதல் முடிப்பு வரை ஒரே உணர்வு நிலையில் ஆடாமல் அசையாமல் கூட்டாமல் குறையாமல் சித்திரப்பாவையாய் நின்று மொழிந்தும் வென்றார் உண்டு!

மேடையை ஆட்டம் போடச் செய்து சுற்றிச் சுழன்று எடுத்தும் படுத்தும் பேசியவரும் பெருவெற்றி கண்டதுண்டு!

தென்றலாய்த் தவழ்ந்தும் கோடையாய் எரிந்தும் வாடையாய் நடுக்கியும் அடைமழையாய் மின்னலாய் அழகாய் உரைத்து வென்றாரும் உண்டு!

அமர்ந்து பேசி அவையை ஏறிடாமல் அவையெல்லாம் அசைவின்றி அவரையே நோக்க இரண்டரை மூன்றுமணிப் பொழுது நகைச்சுவை முதலாம் சுவைகளை ஒருங்கே சுவைக்க முடித்து விட்டாரே என ஏங்கப் பொழிந்தார் உண்டு.

அண்ணாந்த வாய்மூடாது அவையோர்கள் வீற்றிருக்கப் பண்ணார்ந்த சொன்மாலை தொடுத்தவரைத் தமிழகமண் தனிப் பேறாகக் கொண்டிருந்தது உண்டு.

எத்தனை புள்ளிவிளக்கம் - வரலாறு - உலகப்பார்வை என வியக்க வியக்கப் பொழிந்தாரும் உண்டு. இது இசையா, இசையாய்வா, இதுதான் தேனிசை என்பதா, அமிழ்த மழை என்பதா எனச் சுவைக்க நின்றும் நடந்தும் இருந்தும் நெஞ்சக மெல்லாம் நிறைவித்த பெருமக்களைக் கண்டதும் உண்டு.

பட்டிமன்றம் கூட வெட்டிமன்றம் இல்லை - அரியதோர் ஆய்வு மேடை - நயனார்ந்த நடுவர்மன்றம் எனச் செய்த சீரியவரும் செம்மாந்து இருந்ததும் உண்டு. ஏன் இவருக்கு இவ்வளவு நேரம் எனச் சொன்னார், சொன்ன பொழுதுக்கு மேல் ஒரு நிமையமும் பேசாரே, இவரை இப்படியா ஆக்குவது? எப்பொழிவு கேட்பதற்கென்றே வந்தோமோ இவரை இப்படிச் சுருக்க வைத்து விட்டார்களே எனக் கடிந்து கொள்ளப் பொழிந்தாரும் உண்டு! பொழிவுச் சிறப்பு, அதன்முடிவில் அனைவர் உள்ளமும் ஒன்றியிணைந்த ஒருணர்வராதலில் வெளிப்படும். அனைவரையும் எழுந்து நின்று கைதட்டி வாழ்த்த வைத்துவிடும்!

❖❖❖❖

# 8. மின்னல் கீற்று

உலகத் தமிழ் மாநாட்டுப் பொழிவு. 'சங்கச் சான்றோர் சால்பு' என்பது தலைப்பு. தலைவர் ஐம்பது மணித்துளிகள் பேசினார். பேச வேண்டியவர் பட்டியலில் உள்ளபடி 13 பேர்கள்.

தலைவர், ஒவ்வொருவரும் மூன்று மணித்துளிகளில் பேசவேண்டும் என்றார்! எனக்கு முன் பலர் பேசினர். அவர்களுக்கு, அவர்களே எனவும் அந்தப் பொழுது போதவில்லை. தலைவரைப் புகழவே போக்கினர். தலைப்புக்கு வரவே பத்துமணித் துளி.

மாநாட்டுச் செயலர் குறிப்பு, தாள், சட்டை இழுப்பு, சட்டை செய்யவில்லை. எப்படியோ இருந்து என்பொழுது வந்தது. என் பெயரைக் குறிப்பிட்டு 'மூன்றுமணித்துளி' என்றார் தலைவர்.

யான் சென்றேன். "மாநாட்டுப் பெருமக்களே அனைவருக்கும் வணக்கம். எனக்கு 3 மணித்துளி வேண்டியதில்லை. ஒரு மணித்துளி போதும். மேடைத் தொங்கலைப் பாருங்கள்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

என்பது, நீங்கள் ஊருக்குச் சென்றால், 'யாது உம் ஊர்' என்று வினவினால் 'யாதும் ஊர்' என்னுங்கள். 'யாவர் உம் கேளிர்' என்று வினவினால் 'யாவரும் கேளிர்' என்று சொல்லுங்கள். "சங்கச் சான்றோர் சால்பிதே. 'வணக்கம்'!" என்று முடித்தேன்!

கைதட்டானால் கைதட்டு!

மறுநாள் தினமணியில், 'மணித்துளிப் பேச்சு மணியான பேச்சு' என்பது செய்தி.

தமிழ்க் காப்புக் கழகத்தில் மொழிஞாயிறு பாவாணர்க்கு விருதும் பாராட்டும் வழங்கும் விழா! எங்கள் கூட்டம் இரவு 10 மணி அளவில் முடித்தாக வேண்டும் என்னும் வரம்பினது.

கழகத் தலைவர் செந்தமிழ்க் காவலர் சி.இலக்குவனார் வரவேற்பு, அறிமுக உரை அரைமணிப் பொழுது. பாவாணர் ஏற்புரையும், 'விருது, பட்டம்' என்னும் இரண்டு சொற்களைப் பற்றிய ஆய்வுரையும். பொழுது 9.59. உள்ளது ஒரு மணித்துளி; என்

செய்வேன். எழுந்தேன். பாவாணர் முன்னர்ச் சென்றேன். 10 மணிக்குக் கூட்டம் முடித்தாகவேண்டும். ஒரு மணித்துளியே உள்ளது என்றேன்.

'அப்படியோ!' என்று கூறி என் உரையை முடிக்கிறேன் என்று அமர்ந்தார். யான் நன்றி உரையன்.

"இடம்தந்தோர் ஈண்டினோர் சொற்றந்தோர் ஆயோர்க்கு
இடம்தந்தேன் நெஞ்சில் இனிது"

என்றேன். கூட்டம் நிறைந்தது!

காலம், இடம், அவை, குறிப்பு - அறிதல்கள் வைத்த வள்ளுவப் பயன் கற்பதற்கு மட்டுமா? நிற்பதற்காக அல்லவோ!

சென்னையில் செம்மொழி மாநாடு - கருத்தரங்கம் - பல்கலைக் கழக வளாகம். தலைவர் யான்; மற்றைப் புலமையர்கள் துணைவேந்தர்கள், துறைத்தலைவர், பேராசிரியர்கள், முனைவர்கள் இருபத்துமூவர். ஒவ்வொருவரும் ஐந்து மணித்துளிகளுக்கு மிகாமல் பொழியவேண்டும். ஏனெனில், நம் நிகழ்வுப் பொழுது இரண்டு மணி அளவே என்றேன்.

முதலாமர் ஒரு துணைவேந்தர் ஐந்துமணித்துளி வரை தலைப்புக்கே வரவில்லை. உங்கள் மணித்துளி ஐந்தும் முடிந்தது. அடுத்தவர் இவர் வருவார் என்றேன். என்னைச் சினந்து பார்த்து மேடையில் இருந்து இறங்கி நேரே வெளியே சென்றுவிட்டார். என் பொறுப்புக்கு யானே பொறுப்பாளி. பிறர் விருப்பு வெறுப்புக்குப் பொறுப்பாளி அல்லேன்!

கூட்டம் குறித்த இரண்டு மணி அளவில் சரியாக முடிந்து அடுத்த கூட்டம் நான்கு மணிக்குத் தொடங்க வழியாக்கப்பட்டது.

நெய்வேலியில் 'தரக்கட்டுப்பாடு' பற்றிய பொழிவு! நூறு பொறிஞர்கள் கூடிய கூட்டம். இரண்டு மணிப் பொழுது, "திருக்குறளில் தரக்கட்டுப்பாடு" என்னும் தலைப்பில் பொழிவு. பொழுது சரியாக முற்பகல் கடந்த நண்பகல் 11.00 - 1. 00. இரண்டுமணி பொழிந்தேன். பொழிவு முடிந்தது. "திருக்குறளில் இவ்வளவு தரக்கட்டுப்பாட்டுச் செய்தி உண்டா?" என வியந்தார் தலைவர்.

திருக்குறளில் தரக்கட்டுப்பாடு பற்றிய செய்திகளாக யான் தொகுத்த குறள்கள் 121. அவற்றில் பொழிந்தது இருபதே என்றேன். அவர் மேலும் வியந்து ஒருநாள் காலை 9.00 - 1.00 பிற்பகல் 2.00 - 5.00 ஏழுமணி நேரம் பேச முடியுமா? என்றார். ஏற்றேன்; பொழிந்தேன்;

"திருக்குறளில் தரக்கட்டுப்பாடு"

என்னும் நூலே ஆயிற்று அது.

கன்னியாகுமரியில் வள்ளுவர் சிலைப் பாதுகாப்புக் குழுவினர் ஏற்பாட்டில் தமிழர் குடும்பச் சடங்குகள் பற்றிய விளக்கம் செய்ய - பயிற்சி தர - இரண்டு நாள்கள்!

ஏழு, ஏழு - மணி நேரம்!

உடல் உடல்தானே! தொண்டை தொண்டை தானே! எதற்கும் அளவு வேண்டும் அல்லவோ!

தொண்டைக்கட்டு, காய்ச்சல், குளிர் நிலையில் தொடரி ஏறி, திருச்சிராப்பள்ளி எய்தினேன்!

'அளவறிந்து வாழ்தல் என்பது பொழிவுக்கு இல்லாமல் போகிவிடுமா?

தென்குமரி எல்லையில் திருவள்ளுவர் 133 அடி உயரச் சிலை திறப்பு. தலைமை பேராசிரியர் முனைவர் அமைச்சர் தமிழ்க்குடிமகனார். அறிமுகம் செய்யும் போது உலகத் தமிழ் மாநாட்டின் ஒருமணித்துளிப் பொழிவு யான் செய்யும்போது தாம் கேள்வியாளராக இருந்து கேட்டமையை உரைத்து ஏழு மணித்துளி அவர்க்கு; 'வள்ளுவத்தில் கலைச்சொல்' என்பது தலைப்பு என்றார்.

அற்றை முதல்வர், அமைச்சர், பலவகைக் கட்சியர், கலைத் துறையர், பன்மாநிலத்தர், பன்னாட்டவர் முன் பொழிவு அது. வழக்கம் போல் 'பெருமக்களே' என விளித்து வணங்கி என் உரையைத் தொடங்கினேன்.

'அகராதி' கலைச்சொல்; வள்ளுவக் கொடை;

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி"

என்பதில் உள்ள அகரமும் ஆதியும் இணைய அகராதி ஆகின்றது. பாவாணர் 'அகரமுதலி' என்றார் அதற்கும்,

"எழுத்தெனப்படுப,

அகர முதல்"

என்னும் தொல்காப்பியமும்,

'அகர முதல' என்னும் இக்குறளுமே அடியாம். முதலாக அமைந்தது 'முதலி' யாயிற்று.

முற்பகல், பிற்பகல் என்கிறோம் (A.M - P.M)

**"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்"**

என்னும் குறளில் வரும் கலைச்சொற்கள் தாமே!

கோயில்களுக்குத் 'தக்கார்' என அமைக்கிறோம்; இது ஒரு பதவி. 'தக்கார்' இனத்தனாய் என்பதும், 'தக்கார் தகவிலர்' என்பதும் வள்ளுவங்கள் தாமே!

'நாட்காட்டி உள்ளது. அக்கலைச்சொல் மூலம்,

**'நாளென ஒன்றுபோல் காட்டி'**

என்பது தானே! நாட்குறிப்பு, நாள்வழிச் செலவு என்பவை அதன் வழியவை தாமே!

ஆணி, எழுத்தாணி, ஊசி என இருந்தது வள்ளுவர் காலம். ஆனால் எழுதுகோல் தந்தார் எவர்?

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல்"

என்பது தானே!

சமன்செய்து சீர்தூக்கும் கோல் என்பது தானே, சமன் கோல், தூக்கு என்பவற்றின் மூலம்.

உள்ளதெல்லாம் போகும் திவாலா; ஐ.பி; மஞ்சள் கடிதம் என்பவை எல்லாம் 'உள்வீழ்தல்' தானே!

ஆழ்மனம் என்னும் மெய்யியலார் சொல்லை 'உள்ளுள்' என்கிறாரே! முறைமையாம் உலகத்து இயற்கையை 'ஊழ்' என வழங்கி, முறை கேட்டை 'ஊழல்' (ஊழல்லாதது) எனத் தெளிவிக்கிறாரே!

"இவ்வளவு சொற்கள் தாமா? இன்னும் பல!

ஏழுமணித் துளிச் சொற்கள் இவையாம்! வணக்கம்" என்றேன்.

இவை நினைவில் எழும் மின்னல் கீற்றுகளுள் சில.

❖❖❖❖

# 9. நிறைவுரை

நிறைவுரை என்பது பொழிவாளர் முடிப்புரையாம்.

வரம்பு செய்து கொண்டும் வரைந்து கொண்டும் பொழிபவர் முறையே தொடக்கம் வளர்நிலை என்பனவற்றைச் சுருக்கிக் கூறின் சொற்பொழிவின் பிழிவாக இருக்கும்.

அத்தகைமைக்கு முன்னோடியர் இருவர் **மறைமலையடிகள், திரு.வி.க.** பின்னே **அமரஅடிகளார் குன்றக்குடியார்.**

சிலர் பொறுக்கு மணிகளாகத் திரட்டித் தருவர். அறிஞர் **அண்ணா** அவ்வகையில் சுட்டத்தக்கார். பேராசிரியர் **சி.இலக்குவனாரும்** அத்தகையர்.

சிலர் முறைமைப்படியே உரைத்து முடிவான கருத்தை நிறைவிலே வைத்து முடிப்பர்.

பலரும் செய்வது பொழிவதை அன்றித் தனித்தாக முடிவுரை இருப்பதில்லை. கேட்பவர் தம் தகவுக்கேற்பக் கொள்வதாக இருக்கும்.

முன்னவை இரண்டையும் மணியளவு பாராப் பொழிவிலே காணலாம். மணிப்பொழுதுக்குள் பத்துப்பேர் பதினைந்து பேர் ஏறவிடும் இந்நாளில், ‘அவர்களே! அவர்களே!’ என்று ‘சுவர்களே’ என முடிவதாகவே அமைந்துவிடுகின்றன.

வரவேற்பு, பட்டமளிப்பு, பரிசுபெறல் என மேடை ஏறி இறங்கும் நிலையில் உள்ள கூட்டங்களில் கருத்துக்கு - விளக்கத்துக்கு - இடமுண்டா?

பலரை நிறைவு செய்யும் ஏற்பாட்டாளர் ஏற்பாட்டு எண்ணம் நிறைவேறலே நிறைவுரையாக நிற்கும்.

வாடிய பயிர்க்கு வான்மழையெனப்
பொழியும் பொழிவே சொற்பொழிவு
எனல் முடிநிலையாம்.

❖❖❖❖



ஆயர் ஆண்டகை செ. சூசைமாணிக்கரும் - புனித போப்பாண்டவரும்